வேடசந்தூர் பகுதியில் பீங்கான் தொழிலுக்கான மூலப்பொருட்கள்.

4—(*வினா எண். 1420) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் வேடசந்தூர் பகுதியில் பீங்கான் தொழில் செய்ய தேவைப்படும் மூலப்பொருட்கள் எடுக்கும் சாத்தியக் கூறுகள் பற்றி ஆய்வு செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): மாநில புவியியல் மற்றும் சுரங்கத்துறை, அண்ணா மாவட்டம் வேடசந்தூர் பகுதிகளில் கனிவளங்கள் கிடைப்பது குறித்து முறையான சர்வே நடத்தியுள்ளது. அப்பகுதியில் தென்பட்ட பாறைகளிலிருந்து அங்கு பீங்கான் களிமண் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை என்று தெரிய வந்துள்ளது.

தமிழகத்தில் கம்ப்யூட்டர் தயாரிக்கும் தொழிற்சாலை.

5—(*வினா எண். 5348) திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கம்ப்யூட்டர் தயாரிக்கும் தொழிற் சாலை அமைக்கும் திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனத்தில் அட்வெண்ட் கம்ப்யூட்டர் சர்வீசஸ் லிமிடெட் என்ற கூட்டு நிறுவனம் கம்ப்யூட்டர் இடுபொருள் தயாரிக்கிறது, மற்றும் இன்போடெக் லிமிடெட் என்னும் கூட்டு நிறுவனம் கம்ப்யூட்டர் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளது.